பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 199

சனிக்கிழமை
14 ஜூன் 2025

வைகாசி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

தனித்தீவுக்கு மாறுகிறது பூஸா

விரிவு பக்:- 02

ஈ.பி.டி.பி. + ஐ.தே.க. + ஐ.ம.ச. ஆதரவால்

## யாழ்ப்பாண மாநகரசபையில் ஆட்சியைப் பிடித்தது தமிழரசு



யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணம் மாநகரசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைத்துள்ளது. இதன்படி, மாநகர மேயராக மதிவதனி விவேகானந்தராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 11

கோலூன்றிப் பாய்தலில்

## ஸ்கந்தா மாணவனுக்கு தேசியத்தில் தங்கம்!



யாழ்ப்பாணம், ஜூன் 14

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன் ந.டன்ஸ்சன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

20 வயது ஆண்கள் பிரிவில் 4.30 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்தே அவர் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார். (அ-ம-இ)

## நல்லூர் பிரதேசசபை மானின் வசமானது

தவிசாளராக மயூரன்!



யாழ்ப்பாணம், ஜூன் 14

நல்லூர் பிரதேசசபையின் முதலாவது அமர்வு நேற்று நடைபெற்ற நிலையில், அங்கு தமிழ் மக்கள் கூட்டணி ஆட்சியமைத்துள்ளது. தவிசாளராக பத்மநாதன் மயூரன் தெரிவுசெய்யப்பட் 11

## அனைத்துச் சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி நடுநிலை

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் அமர்வுகள் நடைபெற்ற மூன்று சபைகளிலும், ஆட்சியைத் தீர்மானிக்கும் வாக்கெடுப்பின் போது தேசிய மக்கள் சக்தி நடுநிலை பேணியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி எந்தத் தரப்புக்கும் வாக்களிக்காது என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி, முன்பு கூறியதைப் போன்று யாழ்ப்பாணம் மாநகர சபை, 11

திருவுளச் சீட்டின் மூலம்

## சாவகச்சேரி நகரசபையில் ஆட்சியமைத்தது பேரவை

யாழ்ப்பாணம், ஜூன் 14

சாவகச்சேரி நகரசபையில் திருவுளச்சீட்டு மூலம் தமிழ்த் தேசியப் பேரவை ஆட்சியமைத்துள்ளது.

18 ஆசனங்களைக் கொண்ட சாவகச்சேரி நகரசபையில் தமிழ்த் தேசியப் பேரவை 6 ஆசனங்களையும், 11



## இலங்கையில் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்குப் பெரும் பாதிப்பு!

கட்சிகளுக்கு இடையிலான பிளவே காரணம்

ஒக்ஸ்போர்ட் ப்ரூக்ஸ் பல்கலை சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் சிறுபான்மைக் கட்சிகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள பிளவுகள், சிறுபான்மை மக்களின் உரிமைகளைச் சிக்கலுக்குள் தள்ளியுள்ளன என்று ஒக்ஸ்போர்ட் ப்ரூக்ஸ் பல்கலைக்கழகம் தனது ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் ஒக்ஸ்போர்ட் ப்ரூக்ஸ் பல்கலைக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

வெறுமனே சமத்துவம் தொடர்பான வாக்குறுதிகளை விடுத்து உரிமைகள், நீதி மற்றும் சகலரும் உள்வாங்கப்படல் என்பவற்றை உறுதிப்படுத்தக்கூடியவாறான 11

சட்டவிரோத மணல் அகழ்வு

## கல்லாறு பகுதியில் இராணுவக் காவலரண்

கிளிநொச்சி, ஜூன் 14

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் வகையில், கல்லாறு பகுதியில் இராணுவக் காவலரண் ஒன்றை அமைக்க நடவடிக்கை மேற் 11

## கோப்பாயில் வாள்வெட்டு குடும்பத்தலைவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 11

'யானையில ஏறி ரெலிபோன் கதைச்சுக்கொண்டு வீணையை வாசிச்சதாலதான் வீட்டுக்கு வெற்றியாம்'

## யாழ். நகரப் பகுதியில் போதை மாத்திரை மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணம் மாவட்ட நகரப் பகுதிக்கு அண்மித்த பகுதியில் நபரொருவரிடமிருந்து போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே, மேற்படி போதை மாத்திரைகள் மீட்கப்பட்டதுடன், சந்தேகநபரும் 11

வடக்கில் ஒதுங்கும் பிளாஸ்ரிக் துகள்கள்

## கேரளாவில் எரியும் கப்பலில் இருந்து பிரிந்து வெளியேறும் நுண்கூறுகளா?

ஆய்வை முன்னெடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடக்கு மாகாணத்தின் கடற்பரப்புகளில் அண்மைக்காலமாக பிளாஸ்ரிக் துகள்கள் தொடர்ச்சியாக கரையொதுங்கிவரும் நிலையில், அவை கேரளக் கடற்பரப்பில் கடந்த சில நாள்களாக எரிந்துவரும் கப்பலின் கூறுகளா? என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் வடக்கு கிழக்கு 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 13.06.2025 | திகதி 13.06.2025 | திகதி 13.06.2025 | திகதி 13.06.2025 | திகதி 13.06.2025 | திகதி 13.06.2025 | திகதி 13.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4101 | சீட்டிழுப்பு இலக்கம் 1168 | சீட்டிழுப்பு இலக்கம் 0127 | சீட்டிழுப்பு இலக்கம் 2207 | சீட்டிழுப்பு இலக்கம் 5859 | சீட்டிழுப்பு இலக்கம் 1889 | சீட்டிழுப்பு இலக்கம் 0434 |
| ஆங்கில எழுத்து G | வெற்றி இலக்கினம் மீனம் | ஆங்கில எழுத்து V | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து U | ஆங்கில எழுத்து Q |
| | | | சுப்பர் இலக்கம் 07 | | | |
| வெற்றி இலக்கங்கள் 04 06 49 73 | வெற்றி இலக்கங்கள் 01 29 48 58 | வெற்றி இலக்கங்கள் 2 2 7 6 | வெற்றி இலக்கங்கள் 03 14 15 34 | வெற்றி இலக்கங்கள் 2 8 3 7 7 3 | வெற்றி இலக்கங்கள் 04 49 57 62 | வெற்றி இலக்கங்கள் 3 7 7 3 |
| விசேட எழுத்து G | | | | | விசேட எழுத்து U | |

# தீவுப்பகுதிக்கு மாறும் பூஸா சிறைச்சாலை!

*நீதி அமைச்சர் தகவல்*

**கொழும்பு, ஜூன் 14**

**பூஸா சிறைச்சாலையை தீவுப் பகுதியொன்றுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அந்த இடத்தைத் தற்போது வெளிப் படுத்தமுடியாது என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாண யக்கார தெரிவித்துள்ளார்.**

தனியார் தொலைக்காட்சி அலை வரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல்காரர் கள், பெரும் குற்றங்களில் ஈடுபட் டவர்கள்தான் பூஸா சிறைச்சாலை யில் தடுத்துவைக்கப்பட்டுள்ள னர். அது அதி உயர் பாதுகாப்பு வலயமெனக் கூறப்படுகின்றது. ஆனால் சாதாரண சிறைச் சாலை போன்றுதானே அங்கு நிலைமை உள்ளது. இது கண்கா ணிக்கப்பட்டதா? என்ற கேள் விக்குப் பதிலளித்தபோதே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித் துள்ளார். அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

பூஸா சிறைச்சாலைக்கு நான் செல்லவில்லை. பூஸா சிறைச் சாலை உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறப்பட்டாலும் அங்கு தொலைபேசிகள் மீட்கப்படு கின் றன.

'ஜாமர்' பொருத்தினால் அருகி லுள்ள வீடுகளுக்கும் தொலை பேசி அழைப்புகள் வராது.

பூஸா சிறைச்சாலை வேறொரு இடத்துக்கு மாற்றப்படும். தீவு பகு தியொன்றுக்கு கொண்டுசெல்லப் படும். இன்னும் இறுதிமுடிவை எடுக்காததால் இடத்தை வெளி யிடமுடியாது. தீவாக இருந்தா லும் சிறைக்கைதிகளை அவர்க ளின் சட்டத்தரணிகள் சந்திப்ப தற்கு ஏற்பாடுகள் செய்துகொடுக் கப்படும்.

கைதிகளுக்குரிய உரிமைகள் பாதுகாக்கப்படும். தூரம் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. சட்டத்தரணிகளுக்குரிய கொடுப் பனவை வழங்கினால் அவர்கள் செவ்வாய்கிரகத்துக்குக்கூட செல் வதற்குத் தயாராகவே உள்ளனர் - என்றார். (எ-44)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 13.06.2025 | வெள்ளிக்கிழமை | 0567 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| V | 9 8 7 4 0 6 |

DLB

**Super Ball** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 13.06.2025 | வெள்ளிக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2833 | Y | 19 20 37 47 |

**சனிதா** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 13.06.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| T | 17 26 30 45 | 4994 |

**SASIRI** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 13.06.2025 | வெள்ளிக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0703 | 23 24 46 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் |
|---|---|
| 13.06.2025 | வெள்ளிக்கிழமை |

| கும்பம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 24 41 42 53 | 4545 |

DLB

**KAPRUKA** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 13.06.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| V | 24 | 03 16 52 67 | 2009 |

**அத கோடிபதி** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 13.06.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| P | 12 17 26 35 | 2659 |

# சிறை நிர்வாகத்துக்குள் இராணுவம் நுழையாது

*ஹர்ஷன நாணயக்கார தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 14

சிறைச்சாலை நிர்வாகத்தை இராணுவமயப்படுத் தும் எந்த நோக்கமும் அரசாங்கத்துக்குக் கிடை யாது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறைச்சாலை நிர்வாகத்தில் இராணுவம் இருக்க வேண்டியதில்லை. அத்துறையை இராணுவமயப் படுத்தப்போவதும் இல்லை.

சிறைச்சாலை நிர்வாகத்துக்குள் குற்றவாளிகளுக்கு உதவுபவர்கள் இருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறைக்கைதிகளும் மனிதர்கள்தான். அவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படவேண்டும். சிறைச் சாலைக்குள் சிறந்த அதிகாரிகள் உள்ளனர். சில வேளை பற்றாக்குறை ஏற்பட்டால் ஆட்சேர்ப்பு இடம்பெறும் - என்றார். (எ-44)



## 3 மில்லியன் செலவில் பிரமந்தனாறு குளத்தின் வாய்க்கால் புனரமைப்பு

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செய லாளர் பிரிவில் பிரமந்தனாறு குளத்தின் கீழான வாய்க்கால் புனரமைப்புப் பணி ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு நேற்று நடை பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மற்றும் கிளி நொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் களின் பன்முகப்படுத்தப்பட்ட 3 மில்லியன் ரூபா செலவில் இந்தப் புனரமைப்புப் பணி கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி பதில் மாவட் டச் செயலர் எஸ். முரளிதரன், அரச உத்தி யோகத்தர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-113)

# ஊழல், மோசடி ஒழிப்பைக் காட்டி வாக்குறுதிகளை மீறுகிறது அரசு

*இந்திக அனுருத்த குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூன் 14



ஊழல், மோசடிகளை ஒழித்தல் என்ற செயற்பாட்டைப் பெரிதாகக் காட்டி அனைத்து வாக்குறுதிகளையும் இந்த அரசாங்கம் குப்பையில் போடுகிறது என்று முன்னாள் இராஜாங்க அமைச் சர் இந்திக அனுருத்த தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தாம் ஆட்சிக்கு வந்தால் மின் கட்டணம் அரைவாசியாகக் குறைக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது மின்கட்டணத்தை அதிகரிக்க முடிவெடுத்துள்ளனர். மின் உற்பத்திக்கு அதிக செலவாகிறது என்று சொன்னால் அதைக் குறைகின்ற திறமை அரசாங்கத்துக்கு இருக்க வேண்டும். ஊழல், மோசடிகளை ஒழிப்போம் என்று கூறு வது நல்ல விடயம். அது நடக்கவேண்டும். ஆனால், அதை மீண்டும் மீண்டும் கூறி செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாமல் இருப்பதே பிரச்சினை - என்றார். (எ-75)

# குழந்தைகளின் போஷாக்குக்காக சட்டத்திருத்தம்

கொழும்பு, ஜூன் 14

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிக்கவும் முறையற்றவகையில் விற்ப னைசெய்யப்படும் பால்மாக்களி டமிருந்து குழந்தைகளைப் பாது காக்கும் வகையிலும் சட்டத்திருத் தம் கொண்டுவரப்படவுள்ளது. குழந்தைகளின் போஷாக்கை மேம்படுத்தும் நோக்குடனே இந் தச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்ப டவுள்ளது. சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்தச் சட்ட வரைவைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். (ச-41-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயாளரின் உயிர்நாடி தெல்லிப்பழை மருத்துவமனை!

## தரமான சிகிச்சையை உறுதிசெய்யக் கோரி நேற்றுப் போராட்டம்



**யாழ்ப்பாணம், ஜூன் 14**

**தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் தரமான - இலவசமான - சிகிச்சையைப் பெறுவதைத் தடுக்கும் சட்டவிரோதச் செயற்பாடுகளை ஒழித்து நோயாளிகளின் எதிர்காலத்துக்கு உறுதுணையளிக்கவேண்டும் என வலியுறுத்தி நேற்று தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

இதன்போது அந்தச் சங்கத்தின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,


தெல்லிப்பழை மருத்துவமனை வடக்கு மாகாணத்திலுள்ள விசேடமான ஒரேயொரு புற்றுநோய் மருத்துவமனையாகும். வடக்கிலிருந்து தினமும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் இந்த மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெறுகின்றனர். தெற்கிலிருந்து கூட பல நோயாளிகள் இந்த மருத்துவமனைக்கு வந்து சிகிச்சைபெற்றுச் செல்கின்றனர்.

கடந்த காலத்தில் 11 சதவீதமான மக்கள் வெளிமாவட்டங்களிலிருந்து இங்கே வருகைதந்து சிகிச்சைபெற்றுச் சென்றனர். இதிலிருந்து எமது மருத்துவமனை எவ்வாறு சிறப்பான சேவையை வழங்குகின்றது என்பது அனைவருக்கும் தெரியும்.

இதனைச் சிதைக்கும் செயற்பாடு கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்றுவருகின்றது. தனிப்பட்ட இலாபத்தை கருத்தில் கொள்ளாத தன்னலமற்ற மருத்துவர்கள், நிர்வாகத்தினரால் அடக்குமுறை, பழிவாங்கல் மற்றும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். பொய்யான தகவல்களை சமூக ஊடகங்கள்மூலம் பரப்பி சிறந்த மருத்துவர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற முனைகின்றனர். இதனால் மக்கள் தனியார் அல்லது மஹரகம மருத்துவமனைக்கே செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். எனவே ஏழை மக்கள் இலவச சிகிச்சையைப் பெறுகின்ற உரிமையை பாதுகாக்கவேண்டும். சட்டவிரோதச் செயற்பாடுகளிலிருந்து பாதுகாத்து நோயாளிகளைப் பாதுகாத்து அவர்களின் எதிர்காலத்தை உறுதிசெய்யவேண்டும்- என்றார்.

போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் மருத்துவர்கள், சமூகமட்ட அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-125-66)

# பேராசிரியர் சி. தில்லைநாதன் காலமானார்



பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சின்னத்தம்பி தில்லைநாதன் தனது 88ஆவது வயதில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை களுபோவில மருத்துவமனையில் காலமானார். இவர் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறையில் நீண்டகாலம் விரிவுரையாளராகவும் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை, இலங்கைத் தமிழ் இலக்கியம், இலக்கியமும் பண்பாடும், சோழர் கால அரச சபை இலக்கியம் அறிந்தனவும் ஆய்ந்தனவும், நிற்பனவும் நிலைப்பனவும் எனும் நூல்களின் ஆசிரியராவார். இவரின் தமிழ்ப்பணிகளைப் பாராட்டி தென்கிழக்குப் பல்கலைக்கழகம் 2020 இல் இவருக்கு 'இலக்கிய கலாநிதி' எனும் கௌரவத்தினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ச-41)

# நுரைச்சோலை மின்பிறப்பாக்கி 25 நாள்களுக்கு நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 14

நுரைச்சோலை 3ஆவது மின்பிறப்பாக்கி நேற்று நள்ளிரவு முதல் 25 நாள்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளது என மின்சாரசபை தெரிவித்துள்ளது.

பராமரிப்புப் பணிகளுக்காகவே இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் இதனால் தேசிய மின் கட்டமைப்பிற்கு 300 மெகாவாட் மின்சாரம் இழக்கப்படும் என்று மின்சாரசபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்துள்ளார். (ச-இ)

# வழித்தடங்களில் மாற்றம் எயார் லைன்ஸ் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை காரணமாக சில வான்வழிகள் மூடப்பட்டுள்ளதால் லண்டன் உட்பட ஐரோப்பிய நாடுகளின் வான் வழித்தடங்களில் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை தெரிவித்துள்ளது. இதன் காரணமாக, ஐரோப்பிய நாடுகளுக்கான விமான சேவைகளின் போது விமான பயணத்துக்கான நேரம் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சங்கானை மருத்துவமனையில் பிரேத அறைக்கு குளிரூட்டுக!

யாழ்ப்பாணம், ஜூன் 14

சங்கானைப் பிரதேச மருத்துவமனையின் பிரேத அறைக்கு குளிரூட்டல் வசதியை ஏற்படுத்தித் தருமாறு சங்கானைப் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினரால் சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறித்த மருத்துவமனையில் அண்மையில் இறந்த உடலம் ஒன்றை பேணிப்பாதுகாக்கமுடியாத சூழல் ஏற்பட்டது. இதன் காரணமாக வேறு மருத்துவமனைக்கு அந்த உடலம் அனுப்பிவைக்கப்பட்டது.

எனவே இதுகுறித்து உடன் நடவடிக்கை எடுத்து பிரேத அறைக்கு குளிரூட்டல் வசதிகளை ஏற்படுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். (ச-125)




# 'கடவுள் இருக்கிறான் குமாரு!'

முந்தி சினிமாப்படங்களைப்பற்றி வாற விளம்பரங்களில 'மயிர்க் கூச்செறியும் சண்டைக்காட்சிகள் நிறைந்த பரபரப்பான திரைப்படம்' எண்டொரு வசனம் போடுவினம். ஆனால் அந்த மயிர்க்கூச்செறியும் படங்கள்கூட, இப்ப உள்ளூராட்சிசபையளில ஆட்சியமைக்க நடக்கிற காட்சியளுக்கு முன்னால பிச்சை எடுக்கோணும். அந்தளவுக்கு வழக்குகள், திருப்பங்கள், சென்ரிமெண்ட், மயிர்க்கூச்செறியும் சண்டையள் எண்டு பார்க்கவே பரபரப்பா இருக்குது. சாவகச்சேரி நகரசபையில நேற்று நடந்த ஆட்சியமைப்புத்தான் பரபரப்புக்கெல்லாம் உச்சமெண்டு சொல்லுகினம்.

அந்த சபையில் சைக்கிள் ஆறு சீற்றும், வீடு ஆறு சீற்றும் எடுத்து சமனாத்தான் இருந்தவை. ஆனால்பிறகு உந்தக் கூட்டணிக்குழப்பங்கள் எல்லாம் நடந்து, 'கொள்கைக்கூட்டு' எண்டபேரில சங்கு வந்து சைக்கிளில ஏறினதால அவைக்கு எட்டு சீற்றா உயர்ந்து ஆட்சி அவைக்குத்தான் எண்ட நிலைமை. ஆனாலும் வீட்டுக்கட்சிக்காரர் விடேலை. அவை வீணையோட சேர்ந்து கூருதி மீட்டினதால இப்ப அவையின்ர பக்கம் ஏழுபேர். அப்பிடியிருந்தும் 'கொள்கைக் கூட்டணிக்கு' ஒரு ஆள் கூடத்தான். அதை எப்பிடி இல்லாமல் ஆக்கலாம் எண்டு வீட்டுக்காரர் யோசிக்கேக்க, காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த மாதிரி அவைக்கு ஒரு தகவல் கிடைச்சிருக்குது. சைக்கிளின்ர பட்டியல் உறுப்பினர் ஒராளின்ர வதிவிடம் சாவகச்சேரி நகரசபைக்குள்ள இல்லை எண்டதுதான் அந்தத் தகவல். அதுகாணுமே வீட்டுக்கட்சிக்காரருக்கு. உடனேயே அந்த நியமனம் செல்லாது, அந்த உறுப்பினர் பதவிவகிக்க இடைக்காலத்தடை போடோணும் எண்டு வழக்குப் போட்டிட்டினம். முந்தநாள் அந்த வழக்கு விசாரணையில இடைக்காலத்தடை கிடைக்கும் எண்டு வீட்டுக்காரர் எதிர் பார்த்தவை. ஆனால் முதல்நாள் அப்பிடி இடைக்காலத்தடை போடேல. அதால நேற்று அடுத்தகட்ட விசாரணை நடக்கேக்க, தடை வரலாம் எண்டு கதையடிபட்டது. அந்தத் தடை வரமுதல், தவிசாளர் தெரிவை நடத்தி ஆட்சியைப்பிடிக்கோணும் எண்டு சைக்கிள் - சங்குக் கூட்டணிக்காரர் தலையால கிடங்கு கிண்டத் தொடங்கிட்டினம். தடையா? தவிசாளர் தெரிவா? எண்டு அப்பவே பரபரப்பு பத்தியெரியத் தொடங்கிட்டுது. அதுக்குள்ள சைக்கிளில வெண்ட பெண் உறுப்பினருக்கு 'இண்டைக்கு கூட்டத்துக்குப் போகக்கூடாது. போனால் நடக்கிறதே வேற எண்டு ஒரே ரெலிபோன் மிரட்டலாம். அவா பயத்தில போனை ஓஃப் பண்ணிப்போட்டு கூட்டத்துக்குப் போகாமல் இருந்திட்டா. பிறகு சைக்கிள் - சங்குக்கூட்டுக்காரர் கார்விட்டுத்தான் அவாவை கஷ்டப்பட்டு ஏத்திக்கொண்டு வந்தவை.

எண்டாலும் அவையின்ர கெட்டகாலம், தவிசாளர் தெரிவு நடக்க ஒருமணித்தியாலத்துக்கு முதல் அந்த வேற இடத்து உறுப்பினர் பதவிவகிக்க இடைக்காலத்தடையை 'கோர்ட்ஸ்' போட்டிட்டுது. இப்ப சைக்கிளுக்கும் ஏழுபேர், வீட்டுக்கும் ஏழுபேர். அதால ஆர் தவிசாளர் எண்டு திருவுளச்சீட்டுப் போட்டுப் பாக்கிறதெண்டு முடிவு. ஆனால் அப்பிடிச் செய்யவேண்டாம் எண்டு சைக்கிள் - சங்குக்கூட்டுக்காரர் எதிர்க்கத்தொடங்கிட்டினம். 'தவிசாளர் தெரிவை ஒத்திவைச்சுப் போட்டு இன்னொருநாள் வையுங்கோ, அதுக்குள்ள தடை விதிச்ச மெம்பருக்குப் பதிலா இன்னொரு ஆளைப் போட்டிடுவம்' எண்டு கெஞ்சி இருக்கினம். ஆனால் சட்டத்தில அதுக்கு இடமில்லை எண்டதால, முதலில தவிசாளர் ஆரெண்டு திருவுளச்சீட்டு (லொத்தர்) போட்டுப் பார்த்தவை. அந்தச் சீட்டை எடுக்கேக்க 'கடவுள் இருந்தால் நாங்கள் வெல்லுவம். கடவுளில பாரத்தைப் போட்டிட்டு எடுங்கோ' எண்டு சைக்கிள் - சங்குக்கூட்டுக்காரர் சொன்னவை. அவையின்ர வேண்டுதல் கேட்டிச்சோ என்னவோ, அவையின்ர அணிக்குத்தான் வெற்றி. அதுக்குப் பிறகு உப தவிசாளர் தெரிவுக்கும் அதேமாதிரி திருவுளச்சீட்டுப் போட்டவை. அப்பவும் 'கடவுளில பாரத்தைப் போட்டிட்டு எடுப்பம். எங்கட பக்கம் நேர்மை இருந்தால் நாங்கள் வெல்லுவம்' எண்டு சொல்லி சைக்கிள் - சங்குக்கூட்டுக்காரர் அந்தச் சீட்டை எடுத்தால். அதிலையும் அவைக்குத்தான் வெற்றி.

இப்பிடி முதலில சறுக்கினாலும், கடைசியில கடவுளில பாரத்தைப் போட்டதால சைக்கிள் - சங்குக் கூட்டணிக்கு சாவகச்சேரி நகரசபையின்ர ஆட்சி கிடைச்சிட்டுது. இப்ப 'கடவுள் இருக்கிறான் குமாரு' எண்டு அந்தக்கூட்டணிக்காரர் புளுகமாச் சொல்லிக் கொண்டாடுகினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும்.நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய முயற்சிகளில் சிறுசிறு தடைகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. கடன்கள் விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத தனலாபம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பேச்சில் நிதானம் தேவை. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். மாலையில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**கன்னி:** பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சிதரும்.

**துலாம்:** பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாகமுடியும். உடல்நலனில் கவனம்தேவை. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளால் ஆதாயம் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். அலுவலகத்தில் சக ஊழியர்களின் விஷயங்களில் தலையிடவேண்டாம்.

**மகரம்:** சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும். நண்பர்க ளால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கைத்துணையுடன் உறவினர் வீடுகளுக்குச் சென்று வருவீர்கள்.

**கும்பம்:** காரியங்களில் பொறுமை தேவை. எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன்வாங்கவும்நேரிடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால்வீட்டில்சிறு சலசலப்பு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மீனம்:** உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். தாய்மாமன்வகையில் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை இன்று கிடைக்கும்.

# பலாலி விமானநிலையம் தவிர்ந்து ஏனைய காணிகளை விடுவியுங்கள்

## ஜனாதிபதி வலியுறுத்தியதாக கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

பலாலி விமானநிலையம் தவிர்ந்த ஏனைய காணிகளை விரைவில் விடுவிக்குமாறு பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவுறுத்தினாரென கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் குழுத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் பவானந்தராஜா தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மீள்குடியேற்றம் தொடர்பில் விவாதிக்கப்பட்ட நிலையில் பொதுமக்கள் தமது மீள்குடியேற்றம் தொடர்பில் கருத்துகளை முன்வைத்தனர். இதன்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன் பாதுகாப்புத் தேவைகருதிய சில இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது. அவை தவிர்ந்த ஏனைய காணிகளே விடுவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)



# இந்தியத் தூதரகத்தின் குருதிக்கொடை முகாம்!

யாழ்ப்பாணம், ஜூன் 14

உலக இரத்ததான தினத்தை முன்னிட்டு, யாழ். இந்தியத் துணைத்தூதரகம் மற்றும் யாழ். போதனா மருத்துவமனை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த குருதிக்கொடை முகாம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம்பெற்றது.

இதன்போது இரத்ததானக் கொடையாளர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, யாழ். இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள், பொலிஸார், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)

# 1990 அம்புலன்ஸ் சேவையை மானிப்பாயில் ஏற்படுத்துக

யாழ்ப்பாணம், ஜூன் 14

1990 அம்புலன்ஸ் சேவையை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஏற்படுத்தித் தருமாறு சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பொது அமைப்புகளால்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை, மானிப்பாய் பிரதேசத்துக்கு வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் மாத்திரமே இந்திய நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட 1990 அம்புலன்ஸ் சேவை காணப்படுகின்றது. அதனை மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் மேலதிக சேவையாக உள்ளீர்க்கவேண்டும்.

நோயாளிகளை உரிய நேரத்துக்கு அழைத்துச் செல்லமுடியாத சூழல் மற்றும் மரணங்களைத் தடுக்கும் முகமாக இதனைக் கருத்திற் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. (ச-125)

# தாயகம் திரும்பியோருக்கு உதவித்தொகை கையளிப்பு

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களின் சுமூகமான மீள் ஒருங்கிணைப்புக்கான உதவித்தொகை யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனால் கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

வேலணை மற்றும் சாவகச்சேரிப் பிரதேச செயலகப் பிரிவுகளில் மீளத் திரும்பிய ஆறு பேருக்குத் தலா 90 ஆயிரம் ரூபா வீதம் உதவித்தொகை வழங்கப்பட்டது. (ச-41-66)

# பாதீனியத்தை அகற்றாவிடின் சிறையும் தண்டமும்!

யாழ்ப்பாணம், ஜூன் 14

பாதீனியத்தை காலஅவகாசத்தினுள் அகற்றாவிடின் சிறைத்தண்டனையுடன் கூடிய தண்டப்பணம் விதிக்கப்படுவதற்கு தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாதீனியத்தை அகற்றாதோருக்கு எதிராக ஏற்கனவே நடைமுறையிலுள்ள மஞ்சள், சிவப்புத் துண்டுவிநியோ கம் நடைமுறையிலுள்ள நிலையில் அதற்கு அடுத்தகட்டமாக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதன்படி பாதீனியம் வளர்ந்து காணப்படும் காணி உரிமையாளருக்கு மஞ்சள் துண்டு விநியோகிக்கப்பட்டு 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்படும். குறித்த காலப்பகுதியில் அகற்றாவிடின் சிவப்புத் துண்டு வழங்கப்பட்டு 14 நாள்கள் மீண்டும் காலஅவகாசம் வழங்கப்படும். அந்தக் காலப்பகுதியிலும் துப்புரவுசெய்யாவிடில் குறைந்தது 1 மாதம் முதல் 6 மாதம் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு குறைந்தது 10 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரை தண்டப்பணம் விதிக்கப்படும் என்று விவசாயத் திணைக்கள அதிகாரி குறிப்பிட்டார். (ச-125)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, சுற்றாடல் முன்னோடிக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நடைபவனியும் வீதி நாடகமும் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

பழிவாங்குதல் வீரமன்று பொறுப்பதே வீரம்.


– ஷேக்ஸ்பியர் –

# மறுமுகங்கள் வேண்டாம்!

**போ**ர்க்குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறலுக்காக இலங்கைக்கு முழுமையான அழுத்தத்தை வழங்குமாறு ஜேர்மனியிடம் கோரிக்கை விடுத்துள்ளது சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம். ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசாங்கம், இலங்கையின் முன்னைய அரசாங்கங்களில் இருந்து வேறுபட்டதாகத் தெரியவில்லை. முன்னைய அரசாங்கங்கள் போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட முன்னாள் அதிகாரிகளைப் பாதுகாத்தன. தற்போதைய அரசாங்கமும் அதையே செய்துவருகின்றது என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மூன்று நாள்கள் பயணமாக ஜேர்மனிக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்திவருகின்ற பின்னணியில்தான், இத்தகைய காத்திரமான காலத் தேவையான கோரிக்கையை சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் முன்னிறுத்தியுள்ளது.

இலங்கை தொடர்பிலும், தற்போதைய அநுர அரசாங்கம் தொடர்பிலும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளிப்படுத்திய கருத்துகள் மிகச்சரியானவை என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. மனித உரிமை மீறல்களுக்காகவும், பொறுப்புக்கூறல்களுக்காகவும் இலங்கையை உலகநாடுகள் வலியுறுத்தும் களமாக ஐக்கிய நாடுகள் சபை மாறியிருக்கின்றதே தவிர, இலங்கைக்கு தனித்தனியாக அழுத்தங்களை வழங்குவது மிகவும் அரிது. அவ்வாறு ஏதேனும் ஓரிரு வலியுறுத்தல்கள் முன்வைக்கப்படுகின்றன என்றால், அது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் நெருங்கிவரும் காலமாகவே இருக்கும். இதனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளைச் சமாளித்துவிட்டால் சரி என்பதே இலங்கையின் தற்போதைய பிரதான வியூகமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலை மாற்றப்பட்டு இலங்கையின் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படவேண்டுமாக இருந்தால், இலங்கைக்கு சர்வதேச நாடுகள் ஒவ்வொன்றும் தத்தமது அழுத்தங்களை நேரடியாக வழங்கவேண்டும். ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப்படும் பொதுவான தீர்மானங்களுக்கு எதிர்ப்பைக்காட்டிவிட்டு, இருதரப்பு உறவில் செங்கம்பளங்களை விரிப்பதால், இலங்கை ஒருபோதும் எந்த அழுத்தத்துக்கும் ஆட்படப்போவதில்லை. எனவே, இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போருக்கு நீதியை நிலைநாட்டவேண்டும் என்ற பெருவிருப்பு உண்மையில் உலக நாடுகளுக்கு இருக்கின்றதென்றால், ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கும் வலியுறுத்தல்களை நேருக்கு நேராகவும் முன்வைக்கவேண்டும். ஐக்கிய நாடுகள் சபையில் ஒருமுகத்தையும், தனிப்பட்ட இருதரப்பு உறவில் மறுமுகத்தையும் காண்பிக்கும் உலகநாடுகளின் போக்கால்தான், இன்று காஸாவில் குருதிச் சகதி பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கின்றது. காஸாவில் இடம்பெறும் படுகொலைகளுக்காக இஸ்ரேலை மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு அமைய கண்டிக்கும் தரப்புகள், இஸ்ரேலுடனான உறவைத் துண்டிக்கவோ அல்லது இருதரப்பு உறவில் இஸ்ரேலைத் தண்டிக்கவோ தயாரில்லை. இந்தக் கள்ளமௌனம்தான் இலங்கை உள்ளிட்ட நாடுகளில் நிகழ்ந்த அத்தனை மனிதப் படுகொலைகளுக்கும் காரணம்.



# வீதி விபத்துகளைத் தடுக்க பொறுப்புடன் செயற்படுக



பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 14**

**உயிர்களைப் பாதுகாப்பதைப் பொறுப்பாகக் கருதி வீதி விபத்துகளைத் தடுப்பதற்குப் பொறுப்புடன் செயற்படவேண்டும். சட்டங்களால் மட்டுமன்றி சிறந்த தெளிவோடு அதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற வீதி விபத்துத் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்பநிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வீதிவிபத்துகளால் தினமும் ஏழு பேர் இறக்கின்றனர். இந்தத் துயரத்தை நாம் நிறுத்தவேண்டும். வீதி விபத்துகளைத் தடுப்பது என்பது சட்டத்தைக் கடைப்பிடிப்பது மட்டுமல்ல. மற்றவர்களைப் பற்றி சிந்திக்கும், உயிர்களைப் பாதுகாப்பதை தனது பொறுப்பாகக் கருதும், இரக்கத்துடன் செயற்படும் ஒரு சமூகத்தை உருவாக்குவதும் அவசியம். பெற்றோர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும், சாரதிகள் உயிர்களைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும். போக்குவரத்து விதிகள் குறித்து பிள்ளைகளுக்குத்தெளிவூட்டுவதைப்போன்றே, சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு பொலிஸார் மக்களுக்கு அதுபற்றி விழிப்புணர்வூட்டவேண்டும்என்றார். (எ-26)

## கைதிகளின் தரவு திடீர்சோதனை

கொழும்பு, ஜூன் 14

இலங்கையிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளின் ஆவணக்காப்பகங்களிலும் திடீர்ச் சோதனை நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டதாக பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேயபால தெரிவித்துள்ளார்.


குறிப்பாக கைதிகள், கைதிகளின் எண்ணிக்கை போன்ற விவரங்களே சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அமைச்சர், அண்மையில் ஜனாதிபதி பொது மன்னிப்பின்கீழ் கைதி ஒருவர் சட்டவிரோதமான முறையில் விடுதலையான சர்ச்சையை தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ச-33-6)

## அநுர ஆட்சியில் இதுவரை 3 உயரதிகாரிகள் கைது

கொழும்பு, ஜூன் 14

அநுர அரசாங்கம் பதவியேற்று இதுவரை ஒன்பது மாதங்களில் மூன்று உயரதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2024 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய கைதுசெய்யப்பட்டார். மார்ச் 2025இல் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கைதுசெய்யப்பட்டார். ஜூன் 2025இல் சிறைச்சாலை ஆணையாளர் துஷார உப்புல்தெனிய கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-33-6)





## ஜனாதிபதி, பிரதமருக்கு அரசாங்கம் பாதுகாப்பு

கொழும்பு, ஜூன் 14

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் பாதுகாப்புக் குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் போன்றோரின் பாதுகாப்புக் குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி வாகனத் தொடரணிகளைப் பயன்படுத்துவதில்லை. இருப்பினும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் போன்றோரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கில் இடைநிறுத்தப்பட்ட

# வீதி அபிவிருத்திப் பணிகள் விரைவில் ஆரம்பம்


யாழ்ப்பாணம், ஜூன் 14

**வடக்கு மாகாணத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த வீதி அபிவிருத்தித் திட்டப் பணிகள் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

'ஐரோட்' திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 129.77 கிலோமீற்றர் நீளமான வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

'ஐரோட்' திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் 225.51 கிலோமீற்றர் நீளமான 55 வீதிகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த வீதிகளில் 98.74 கிலோமீற்றர் வீதிகள் திருத்தப்பட்ட நிலையில், அபிவிருத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட 'ஐரோட்' திட்டம் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு வந்த நிலையில், 'ஐரோட்' திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி வேலணையில் 2 வீதிகளும், ஊர்காவற்றுறையில் 2 வீதிகளும், தென்மராட்சியில் 7 வீதிகளும், கோப்பாயில் ஒரு வீதியும், பருத்தித்துறையில் 2 வீதிகளும், கண்டாவளையில் 3 வீதிகளும், பச்சிலைப்பள்ளியில் ஒரு வீதியும், பூநகரியில் 4 வீதிகளும், மாந்தை கிழக்கில் 2 வீதிகளும், மாந்தை மேற்கில் 3 வீதிகளும், நானாட்டானில் 4 வீதிகளும், ஒட்டுசுட்டானில் 2 வீதிகளும், கரைதுறைப்பற்றில் 3 வீதிகளும், வவுனியா வடக்கில் 6 வீதிகளும், வெண்கலச்செட்டிக்குளத்தில் 6 வீதிகளும், வவுனியா தெற்கில் 3 வீதிகளும், வவுனியாவில் 4 வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (ச-26)




## 'ஆனையிறவு உப்பு' பெயர் பொறிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்திசெய்யப்படும் உப்புக்கு மீண்டும் 'ஆனையிறவு உப்பு' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்புக்கு அண்மையில் 'ரஜ உப்பு' எனப் பெயர் சூட்டப்பட்ட நிலையில் தமிழ்மக்கள் மத்தியில் எதிர்ப்புகளும் கண்டனங்களும் வெளியிடப்பட்டன.

இந்தநிலையில் மீண்டும் அந்த உப்புக்கு ஆனையிறவு உப்பு எனப் பெயர் சூட்டப்பட்டது. குறித்த உப்பளத்தில் உற்பத்திசெய்யப்படும் உப்பானது வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக விநியோகம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-27)




### தெல்லிப்பழை மருத்துவமனையின்

## கால்வாயினூடாக கழிவுநீரை வெளியேற்றுவதால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

தெல்லிப்பழை மருத்துவமனையின் வடிகால் ஊடாக வறட்சியான காலப்பகுதியிலும் மூன்றாம் தரப்புகளால் கழிவுநீர் வெளியேற்றுவது மருத்துவமனைக்கு சுகாதாரப் பாதிப்பை ஏற்படுத்தும் என தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் பரா.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெல்லிப்பழை பிரதேச ஆதார மருத்துவமனையின் வடிகாலில் வழக்கையாறு ஆரம்பப் பகுதி காணப்படுகின்றது. மழைக் காலங்களில் வடிகாலினூடாக மழை நீர் வெளியேறுவது எமக்குப் பிரச்சினையல்ல. ஆனால் வறட்சியான காலப் பகுதிகளில் குறித்த கால்வாய் ஊடாக மூன்றாம் தரப்புகளால் கழிவுநீர் வெளியேற்றப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்குக் கட்டுப்பாட்டில் எமது தெல்லிப்பழைப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவே முன்னிலையில் இருக்கின்றது.

இவ்வாறான சூழலில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை அருகாமையால் கழிவுநீர் அகற்றல் மருத்துவமனைக்கு சுகாதாரம் பாதிப்பை உண்டுபண்ணும் - என்றார்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் பவானந்தராஜா, பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, மருத்துவமனை நிர்வாகம், நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து முடிவுகளை எட்டுங்கள் - என்றார். (ச-125)



## வீட்டுத்திட்டத்துக்கான நிதி அரசாங்கத்தால் உயர்வு!

### மீளாய்வுக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட பதில் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

வீட்டுத்திட்டத்துக்கான நிதி அமைச்சரவையால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கென 891.30 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளது என்று என்று யாழ்.மாவட்டப் பதில் செயலர் தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்டம், வீடமைப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் 6 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுக்கான நிதி 9 இலட்சம் ரூபாவாகவும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுக்கான நிதி 15 இலட்சம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் 9இலட்சம் பெறுமதியான 53 வீடுகளுக்கும், 15இலட்சம் பெறுமதியான 563 வீடுகளுக்குமான நிதியுமாக மொத்தமாக மாவட்டத்திற்கு 891.30 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளது. அதில் முதற்கட்டமாக 235 மில்லியன் நிதியொதுக்கீடு விடுவிக்கப்பட்டுள்ளது. எனவே வீட்டுத் திட்ட வேலைகளை பிரதேச செயலாளர்கள் துரிதப்படுத்த வேண்டும் என்றும் அவர் பணிப்புரை வழங்கினார். (ச-125,22,27,66)

## உடைமையில் போதைப்பொருள் மூவர் கைது


யாழ்ப்பாணம், ஜூன் 14

போதைப் பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரும், போதைமாத்திரைகளைக் கொள்வனவுசெய்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்களும் ஏழாலையில் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு பொலிஸார் மேற்கொண்ட விசேட ரோந்து நடவடிக்கையில் போதை மாத்திரைகள் மற்றும் ஹெரோய்ன் விற்பனை செய்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரிடம் இருந்தும் தலா இரு போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் ஏழாலை மயிலங்காட்டில் உள்ள வீடொன்று சோதனையிடப்பட்டது. அந்த வீட்டில் இருந்த பொம்மை ஒன்றுக்குள் இருந்து 400 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதுடன், 2 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டுள்ளது. அந்த வீட்டில் இருந்தவரும் கைதுசெய்யப்பட்டார். (ஏ-125)

## 6 ஆடுகள் திருட்டு இருவர் சிக்கினர்!



யாழ்ப்பாணம், ஜூன் 14

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்களப்புப் பகுதியில் 6 ஆடுகள் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வீட்டில் கட்டிநின்ற 6 ஆடுகள் காணாமற்போனமை தொடர்பில் உரிமையாளரால் கடந்தவாரம் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தநிலையில் நேற்று துன்னாலைப் பகுதியில் 5 ஆடுகளையும் திருட்டுக்குப் பயன்படுத்திய வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியதுடன் இரண்டு சந்தேகநபர்களையும் கைதுசெய்தனர். (ச- 28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னார் வளங்கள் சூறையாடல் உடன் நிறுத்தப்படவேண்டும்!

மன்னாரில் போராட்டம்; ஜனாதிபதிக்கு மனு கையளிப்பு

**மன்னார், ஜூன் 14**
**மன்னாரில் மக்களின் வாழ்வியலைப் பாதிக்கும்வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனியமணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் மன்னார் பிரஜைகள் குழு மற்றும் சிவில் பொது அமைப்புகள் இணைந்து ஏற்பாடுசெய்த மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் கடந்த புதன்கிழமை மன்னாரில் இடம்பெற்றது.**

பேரணி முடிவில் ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட மனு வாசிக்கப்பட்டு, மன்னார் மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எங்களையும், எங்கள் வாழ்விடங்களையும், எங்கள் வளங்களையும் அழிவிலிருந்து பாதுகாக்கவேண்டும். எமது மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் பல சட்டவிரோத அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரான அனைத்துத் திட்டங்களையும் உடன்நிறுத்தி, மக்களுடன் நல்ல முறையில் கலந்துரையாடி, அழிவுகளை ஏற்படுத்தும் திட்டங்களை கைவிட்டு மக்களைப் பாதிக்காத திட்டங்களை மேற்கொள்ளவேண்டும்- என்றுள்ளது.

போராட்டத்தில் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புகள், மீனவ சங்கங்கள் பல்வேறு சிவில் அமைப்புகள் பங்கேற்றன.

(ச-25, 56,60)

## சர்வதேசக் குற்றங்களைத் தடுக்க ஆஸி. பொலிஸுடன் ஒப்பந்தம்

கொழும்பு, ஜூன் 14

சர்வதேசக் குற்றங்களுக்கு எதிரான செயற்பாடு, குற்றங்களைத் தடுக்க மற்றும் பொலிஸ் ஒத்துழைப்புகள் தொடர்பாக அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸாருக்கும், இலங்கைப் பொலிஸாருக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளதாவது பயங்கரவாதம், இணையவழிக் குற்றங்கள், போதைப்பொருள் கடத்தல், மனித வியாபாரம், மனிதக் கடத்தல் மற்றும் வேறு விதத்திலான திட்டமிட்ட மற்றும் சர்வதேச குற்றங்களால் ஏற்பட்டுள்ள சவால்களுக்கு முகங்கொடுக்கும் போது இலங்கையும் அவுஸ்திரேலியாவும் இசைந்துபோகும் விருப்புகளுடன் செயலாற்றுகின்றன.

சர்வதேச திட்டமிட்ட குற்றங்களைத் தடுத்தல், ஒருங்கிணைந்த சட்டவிதிப்புகளை மேம்படுத்தல், தற்போதுள்ள ஒத்துழைப்புப் பணிச் சட்டங்களைப் பலப்படுத்தல், தகவல் மேம்பாடு மற்றும் அறிவுப் பரிமாற்றம் செய்தல், இயலளவு விருத்தி போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸ் மற்றும் இலங்கைப் பொலிஸ் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார்.

(எ-இ)

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 14

காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கையில் சுன்னாகம் பகுதியில் வைத்து கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 40 லீற்றர் கோடா, ஒன்றரை லீட்டர் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபருக்கெதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ச-41-23)

## மாத்தளையில் உருவாகும் குரங்குகள் சரணாலயம்

மாத்தளை, ஜூன் 14

குரங்குகளால் ஏற்படும் சேதங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அவற்றைத் தடுத்துவைக்கும் இடங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் முன்னோடித்திட்டம் மாத்தளை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வனவிலங்கு பாதுகாப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.

முதலாவது குரங்கு பாதுகாப்பு சரணாலயத்தை மாத்தளை மாவட்டத்தில் களுகங்கை நீர்த்தேக்கத்துக்கு அருகில் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நீர், உணவு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்கு 150 ஹெக்டேயர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு 283.87 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

முன்மொழியப்பட்ட குரங்குத் தடுப்பு சரணாலயத்துக்கான பரிந்துரைகளை வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது. மாத்தளை மாவட்ட ஒழுங்கிணைப்புக் குழுவின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

(எ-இ)



கொழும்புத்துறை வதரிபீட மேற்கு விநாயகர் ஆலயத்தில் பூங்காவனத் திருவிழாவில் விநாயகருக்கு திருக்கல்யாணம் இடம்பெற்றது. தொடர்ந்து மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சுவாமி பூந்தண்டி கையில் வீதிவலம் வந்தார்.

(ச-33-17)



## மின்சாரக் கட்டண அதிகரிப்பு மக்களுக்கு இழைத்த துரோகம்

சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

மின்சாரக் கட்டணத்தை 15 வீதம் அதிகரித்திருப்பது மக்கள் ஆணையைக் காட்டிக்கொடுக்கும் செயல் என்றும், மக்கள் ஆணைக்கு இழைக்கப்படும் துரோகம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது ஜனாதிபதித் தேர்தலின்போது மின்சாரக் கட்டணத்தைக் குறைப்போம் என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார். அந்தக் கட்சி வெற்றி பெற்று 159 ஆசனங்களைத் தனதாக்கியுள்ள நிலையில் மின்சாரக் கட்டணத்தை 33 வீதத்தால் குறைத்திருக்கவேண்டும். அது நடக்கவில்லை. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறி மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க தற்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் வரை மின்சார நுகர்வோருடன் இணைந்து ஐக்கிய மக்கள் சக்தி குரல் எழுப்பும். ஐக்கிய மக்கள் சக்தி ஜனநாயக ரீதியிலான போராட்டத்திலும் ஈடுபடும் என்றார்.

(எ-இ)

## வாகனப் புகைப்பரிசோதனை நெடுங்கேணியில் முன்னெடுப்பு

வவுனியா, ஜூன் 14

வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நெடுங்கேணிப்பகுதியில் ஒருநாள் சேவையாக வாகனப் புகைப்பரிசோதனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நெடுங்கேணிப்பகுதியில் வாகனப் புகைப்பரிசோதனை நிலையமொன்று இல்லாதநிலையில் குறித்த பகுதி மக்கள் பெரும் இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவந்தனர்.

இந்த நிலையில் 2025ஆம் ஆண்டுக்கான முதலாவது வவுனியா வடக்குப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில், நெடுங்கேணியில் வாகனப் புகைப்பரிசோதனை நிலையமொன்றை அமைக்கவேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியிருந்தார். இந்நிலையில் நெடுங்கேணியில் வாரத்தில் ஒருநாள் சேவையாக வாகனப் புகைப்பரிசோதனை நிலையம் இயங்குவதாக நேற்று நடைபெற்ற இரண்டாவது வவுனியா வடக்குப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இதன்போது தமது கோரிக்கையை ஏற்று தொடர்ச்சியாக எதிர்நோக்கிய இடர்பாட்டைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நன்றிகளைத் தெரிவித்தார்.

(ச-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மாலை நேர ஆங்கில ஆசிரியர் தேவை**

மாலைநேர ஆங்கில வகுப்பிற்கு ஆசிரியர் தேவை
**(யாழ்ப்பாணத்தில் வசிப்பவர். ஓய்வு பெற்ற ஆசிரியர் விரும்பத்தக்கது)**

தொடர்பு: **077 445 8582**

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் விவசாய முதலீட்டு நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

1. கிளை முகாமையாளர்.
2. சந்தைப்படுத்தல் முகாமையாளர்.
3. சந்தைப்படுத்தல் அதிகாரி.

முன் அனுபவம் உள்ள/அற்ற ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு : **076 092 0173**
**075 711 5572**

(CS 58561) K-1

# புதிய அரசமைப்பு உருவாக்கம் எப்போது என்பது தெரியாது

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 14**

**புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய பணி ஆரம்பமாகும் திகதி தொடர்பில் அமைச்சரவையில் இன்னும் எவ்வித தீர்மானமும் எட்டப்படவில்லை என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.**

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது, புதிய அரசியலமைப்பு இயற்றப்படும் என தேசிய மக்கள் சக்தி உறுதி வழங்கியிருந்தது. அதன் தற்போதைய நிலை என்ன? என அமைச்சரிடம் கேள்வி எழுப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர்

அந்தப் பணியை முன்னெடுப்பதற்குரிய திகதி விவரம் அமைச்சரவையில் இன்னும் தீர்மானிக்கப்பட வில்லை. கொள்கை அளவில் எடுக்கப்பட்ட தீர்மானம் அவ்வாறே உள்ளது. ஆரம்ப மற்றும் முடிவுத் திகதி பற்றி இன்னும் ஆராயப்படவில்லை. எது எப்படி இருந்தாலும் புதிய அரசமைப்பு நிச்சயம் நிறைவேற்றப்படும் என்பது உறுதி - என்றார். அதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் பற்றிய கேள்விக்குப் பதிலளித்த நீதி அமைச்சர், புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போதே இதற்குரிய பணியும் இடம்பெறும். கால எல்லை தொடர்பில் உறுதிமொழியை வழங்க முடியாது. எனினும், தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழியின் பிரகாரம் நடவடிக்கை இடம்பெறும் - என்றார். (எ-44)

## Invitation for Bids (IFB)
## VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA PROVINCIAL SPECIFIC DEVELOPMENT GRANT (PSDG) AND STAMP DUTY WORKS

1. The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Vengalacheddikulam Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the work(s) and goods listed in the table below.

| S. No | Bid No. | Source of Fund | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs.) | Validity Period | |
| 1 | PSDG/NP/VAV/VCKPS/2025/LAR/02 | PSDG | Construction of Menicfarm 5th circle Road (Balance Work) | 5.90 | C8 & Above(Highway) | 60,000.00 | 10.10.2025 | 84 |
| 2 | SD/NP/VAV/VCKPS/2025/W/01 | Stamp duty | Construction of Pay and use Bathroom , toilet, Disability toilet at Cheddikulam bus stand | 1.76 | C9 & above (Building) | 18,000.00 | 12.09.2025 | 84 |
| 3 | PSDG/NP/VAV/VCKPS/2025/BS/01 | PSDG | Renovation of kurukkalputhukkulam Bus Stop<br>Renovation of bus stop at Menic farm near the school Road<br>Renovation of Bus stop at menic farm (near the Welcome entrance)<br>Renovation of Vadakadu bus stop<br>Renovation of Bus stop at Veerapuram | 2.20 | C9 & above (Building) | 23,000.00 | 12.09.2025 | 84 |
| 4 | PSDG/NP/VAV/VCKPS/2025/W/02 | PSDG | Supplying & Installation of Hybrid 3kw Roof top Solar Panel at Veppankulam Water Purification centre | 1.27 | SEA registration | 13,000.00 | 12.09.2025 | 35 |

2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
3. Interested eligible bidders may obtain further information from **Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road [Email: cheddips@gmail.com]** from **09.00 Hrs to 15.00 Hrs** and inspect the bidding documents at the address **Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road, Cheddikulam .**
4. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the **"Schedule/Bidding Data"** of the Procurement Document for works and goods.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address **Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road Cheddi kulam. from 14.06.2025 until 26.06.2025 from 09.00 Hrs to 15.00 Hrs.** Upon payment of a non-refundable fee of **Two thousand five hundred Rupees** ( 2500.00). **The method of payment will be by cash.**
6. Bids must be delivered to the address **Chairman, Divisional Procurement Committee, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar-Madawachchi Road, Cheddi kulam on or before 27th June 2025 and 14.00 Hrs.** Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.
7. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.
8. The pre-bid meeting will be held on 20.06.2025 at 14.00 Hrs at the Vengalacheddi kulam Pradeshiya Sabha, Mannar- Madawachchi Road, Cheddikulam.

The address (es) referred to above is (are):

**Chairman,**
**Divisional Procurement Committee.**
**Vengala cheddikulam Pradeshiya Sabha**
**Mannar- Madawachchi Road, Cheddikulam**
**[Telephone No: 024 2260914 Fax No: 024 2260913]**
**14.06.2025**

(CR/45133) J-1

# ஈஸ்டர் தாக்குதலின் பின்னணி கண்டறியப்படாததால் கவலை

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 14

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் நடைபெற்று ஆறு ஆண்டுகள் கடந்துள்ளபோதும், இந்தத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் செயற்பட்ட குழுவினர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

6 வருடங்களுக்கு முன்னர் பயங்கரமான தாக்குதல் இடம்பெற்றது. இது தொடர்பில் எமக்குப் பல கேள்விகள் உள்ளன. இந்தத் தாக்குதலின் பின்னணியில் செயற்பட்ட குழுவினர் யார் என்பதை இன்னமும் கண்டுபிடிக்க முடியாமல்போயுள்ளது. ஆறு வருடங்கள் கடந்தும் முன்னேற்றம் இல்லை.

நீதியை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை வேண்டா வெறுப்பாக முன்னெடுக்க முற்பட்டால் அது உயிரிழந்த மக்களை அகௌரவப்படுத்தும் செயலாகவே அமையும். முன்கூட்டியே தாக்குதல் தொடர்பில் தகவல் கிடைத்தும் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக, விசாரணை ஆணைக் குழுக்களில் உள்ள பரிந்துரைகள் நடைமுறையாக்கப்படாமை கவலையளிக்கின்றது. இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடு தொடர்பில் வெட்கமடைகின்றோம்: கண்டிக்கின்றோம்.

ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கு ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கையை நாம் மதிக்கின்றோம். ஆனால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் எமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படாமை தொடர்பிலும், அதற்குரிய நடவடிக்கை ஆரம்பமாகாமை குறித்தும் நாம் கவலையடைகின்றோம் - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 14 . 08 . 1946



விண்ணில் 14 . 05 . 2025

கடந்த 14.05.2025 புதன்கிழமை அன்று நித்திய இளைப்பாறுதல் அடைந்த எமது அன்புச் சகோதரி

செல்வி சின்னத்துரை

**கிளடிஸ் மங்களமணி சுவீற்றி**


அவர்களின் 31 ஆவது நினைவு நாள் ஆராதனை இல.59 லவ் லேன் உடுவிலிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (14.06.2025) சனிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு நடைபெறும். அந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
சி. சுகிர்தராஜன் குடும்பத்தினர்
T.P: 077 670 1605

(CS/58557) J-1

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 03 . 1942



மறைவு 18 . 05 . 2022

**அமரர் சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன்**
(வரி மதிப்பீட்டாளர் - யாழ் மாநகரசபை
முன்னாள் யாழ் மாவட்ட சாரணஆணையாளர்)

திதி - அபரபட்ச திருதியை

உங்கள் மரணமே உங்கள் இறைபக்திக்கு
சான்றாகும்
அப்பா உங்கள் வேண்டுதல் போன்றே
காற்றாய் வந்த காலன் கணப் பொழுதில்
அழைத்து சென்றுவிட்டான்.
ஆண்டுகள் மூன்று ஆன போதும் கூறாமல்
சென்றதனால் ஏக்கம் இன்னும் தீரவில்லை
அப்பா...

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முருகமூர்த்தி வீதி
வண்ணார்பண்ணை

தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்

# நிலாவணன் சிறப்பிதழ்; இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 14

இலக்கியவெளியின் 'நிலாவணன்' சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு, 'எங்கட புத்தகங்கள்' இல்லத்தில் இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வின் தலைமையில் இடம்பெற வுள்ள நிகழ்வில், வெளியீட்டு ரையை பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேசன், சிறப்புரையை பேராசிரியர் வ.மகேசன் ஆகி யோர் ஆற்றவுள்ளனர். சிறப்புரை கள் பற்றிய உரையை இ.இரா ஜேஸ்கண்ணன், சின்னராஜா விம லன் ஆகியோர் நிகழ்த்தவுள்ள னர். (ம-இ)

## நன்றி நவிலல்





ந.நந்தகுமாரன் ஆகிய நான் கடந்த ஒரு வருடமாக ஈரல் பழுதடைந்து பெரும் உபாதைக்கு உள்ளாகியிருந்தேன். எத்தனையோ வகையான பரிசோதனைகள் செய்தும், எத்தனையோ முறை எனது வயிற்றில் உள்ள நீரினை ஊசி மூலம் வெளியேற்றியும் இருந்த போதிலும் இத்துன்பத்திலிருந்து மீள முடியாமல் மிகவும் மனவேதனையுற்றும், உடல் உபாதைகளையும் அனுபவித்து வந்தேன்.

எனது பரிசோதனை முடிவுகளை பார்வையிட்ட வைத்தியர்களும் ஈரல் மாற்று சத்திர சிகிச்சை என்பதை வலியுறுத்தினர். எனது மனவேதனையாலும் பயத்திலும் சத்திரசிகிச்சைக்கு சம்மதிக்காமலிருந்தேன். Dr.Thamara perera (Hepatobiliary Liver Transplant Surgeon)

என்பவரே எனது மனவேதனையை புரிந்து கொண்டு எனக்கு தைரியமளித்து நம்பிக்கையூட்டி சிகிச்சைக்கு சம்மதிக்க வைத்-தார். இருந்த போதிலும் நான் பயத்துடனே சம்மதித்தேன்.

சத்திரசிகிச்சை கடவுள் கருணையால் வெற்றிகரமாக நடைபெற்று நான் இப்போது மிகவும் நலமாக இருக்கிறேன். இச்சத்திரசிகிச்சையை சாமர்த்தியமாகவும் வெற்றிகரமாகவும் செய்த Dr. Thamara perera அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிக்கிறேன்.மேலும் சிகிச்சைக்கு உதவிய சக வைத்திய நிபுணர்களுக்கும் Kings Hospital Colombo நிறுவனத்திற்கும் சிறப்பாக கவனித்த தாதியர்களுக்கும் சக ஊழியர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி
தெரிவிப்பவர்
திரு. திருமதி.
நந்தகுமாரன்
ஊரெழு





## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 10 . 1947



மறைவு 13 . 06 . 2025

**தனபாலசிங்கம் தெய்வேந்திரம்**

பெரியாவிடை வித்தகபுரம் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மகாலட்சுமியின் அன்பு மகள் தெய்வேந்திரம் அவர்கள் நேற்று (13.06.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பிரதீபன், பிரதிலீபன் மற்றும் பிரகாசினி (வலி வடக்கு பிரதேசசபை), ஆகியோரின் அன்புத் தாயாரும், விமல்ராஜ் இன் அன்பு மாமியாரும், டேனுஜா, லோகப்பிரியன், யசிந்தா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்காலுக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகன் விமல்ராஜ்
077 047 0229, 077 402 0080

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜம் ஒன்று நிழலாகி ஆண்டு ஒன்று



தளிராக 16 . 11 . 1996

சருகாக 14 . 06 . 2024

## சிவகருணன் சாருஜன்

(ஐக்கிய அமெரிக்கா)

கண்களும் பட்டனவோ காலன் உனை பறித்திடவே
கரைகாணா சோகத்தில் நாம் இங்கு அழிந்திடவே
மண்ணிலே வாழும் வரை மறைந்திடாது உன் நினைவு
எம்மோடு உலா வந்த ஒளி நிலவே
என்னாளும் நினதன்பு நிழல் போல துணை வருமே

பொ. மாதலாராஜா,
அண்ணாவி வளவு,
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.
T.P : 021 224 2046

என்றும் மீளா துயருடன்
அம்மா, அப்பா,
தங்கை, தம்பி

# அடிக்கல் நாட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 14

தொல்புரம் மேற்கு மணிவாசகர் சனசமூக நிலையக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வு நிலையத் தலைவர் வே.நிஷாந் தலைமையில் இன்று சனிக்கிழமை பி.ப. 2மணிக்கு மணிவாசகர் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

(ச-41)

# நூல் வெளியீட்டு விழா

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருநெறிய தமிழ்மறைக் கழகத்தின் ஏற்பாட்டில், கலாபூஷணம் பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை எழுதிய, 'நாட்டியத் தொகுப்பு' நூல் வெளியீட்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

இணுவில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் பேராசிரியர் க.தேவராசா தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

(ம-இ)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 . 07 . 1945

மறைவு 28 . 05 . 2021


திதி - 14.06.2025

என் உலகில் அன்பு பாசம் நம்பிக்கை
என்ற உறவுக்கு நிகரான உறவு
அன்னை மட்டும்தான்.
என்றென்றும் உங்கள் பாதத்தில்
நாம்.

புலோலி மேற்கு பருத்தித்துறை

மகள்
றஞ்சனாமதி அஞ்சனகுமார்

# மரண அறிவித்தல்



தோற்றம் 21.01.1948

மறைவு 11.06.2025

## வைத்திலிங்கம் உலகநாதன்

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் உலகநாதன் கடந்த (11.06.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், யமுனாதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வசந்தன் மற்றும் வாகீசன் (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தி, சிவஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவனின் அன்புப் பேரனும், நவமணிதேவி, லோகேஸ்வரன் (பிரித்தானியா), கோபாலசிங்கம் (ஜேர்மன்), காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், கமலாதேவி, வசந்தாதேவி, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைத்திலிங்கம், கனகாம்பிகை (அவுஸ்திரேலியா), விமலாதேவி (பிரித்தானியா), சுகி (ஜேர்மனி), றெமோனா (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான தம்பிராசா, பரம்சோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 935 2871, 076 066 4046

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் சந்தியை அபிவிருத்தி செய்க

*பிரதேச அமைப்புகள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூன் 14
மக்கள் நலன்கருதி கோப்பாய் சந்தியை அபிவிருத்திசெய்து தருமாறு கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் பிரதேச மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கைதடி, மானிப்பாய் பிரதான வீதிகளை இணைக்கும் கோப்பாய் சிக்னல் சந்தியின் அருகாமையில் பாதசாரிகள் நடந்து செல்லக்கூடிய வகையில் பாதசாரி மேடைகளை அமைக்கவேண்டும். மேலும் கோப்பாய் சந்திக்கு அருகாமையில் திறந்த நிலையில் காணப்படும் ஆழமான வடிகாலை மூடி அதன் மேல் பேருந்துத் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதன் மூலமாக தேவையற்ற விபத்துகளைத் தவிர்க்கலாம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-25, 125)

# வேலுப்பிள்ளை வித்தியாலயத்தை சொந்த இடத்தில் ஆரம்பியுங்கள்

*ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூன் 14
வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்தை அதன் சொந்த இடத்தில் மீள ஆரம்பிப்பதற்கு அந்தக் காணியை உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கவேண்டும் என்று தெல்லிப்பழை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பரா நந்தகுமார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பாடசாலையில் 400 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர். இந்தப் பாடசாலை வசாவிளான் மத்திய கல்லூரி மைதானத்துக்கு அருகே இயங்குகின்றது. அடிப்படை வசதிகள் இன்றிய நிலையில் மாணவர்கள் தூசிகளை எதிர்கொண்டு சுவாசப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். மலசலகூட வசதிகள் இன்றி மாணவர்கள் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இந்தப் பாடசாலையின் காணி வசாவிளான் மத்திய கல்லூரியில் இருந்து 75 மீற்றர் தூரத்தில் உள்ளது. அந்தக் காணியை விடுவிக்கவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திர சேகரன் பொறுப்புவாய்ந்த கல்வித் திணைக்கள அதிகாரியிடம் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த அவர், காணியில் கட்டம் இல்லை, கட்டடத்தைக் கட்டவேண்டிய சூழல் ஏற்படும் என்று தெரிவித்தார். இந்த விடயத்தில் கரிசனை செலுத்தப்படும் என்றும், பாடசாலைக் காணியை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார். (எ-125)



# கொடிச்சீலை கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14
வரலாற்றுச்சிறப்புமிக்கநயினாதீவுஸ்ரீ நாகபூஷணிஅம்மன்ஆலயமஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்தும் 15 தினங்கள் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

ஆலயப் பெருவிழாவை முன்னிட்டுக் கொடிச்சீலையை உற்சவக் குருமணியிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம்வியாழக்கிழமைநடைபெற்றது. (ச-41-66)

---

## கோப்பாயில்...

ச.துஷ்யந்தன் (வயது-43) என்ற குடும்பத்தலைவர் ஒருவரே இவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். வாள்வெட்டுத் தாக்குதலுக்கு உள்ளான அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின் போது நேற்று இரவு உயிரிழந்துள்ளார். பழிவாங்கும் நோக்குடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## நல்லூர்...

டுள்ளார். தமிழ்மக்கள் கூட்டணியின் சார்பில் பத்மநாதன் மயூரன் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்ட நிலையில், வேறுயாரும் போட்டியிடாமையால் அவர் புதிய தவிசாளராக ஏகமனதாகத் தெரிவானார்.

ஈ.பி.டி.பி.யின் உறுப்பினர் தவிசாளர் தெரிவின்போது சபையிலிருக்கவில்லை எனத் தெரிவித்து வெளியேறினார். உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இ.ஜெயகரன் தெரிவுசெய்யப்பட்டார்.

இதேவேளை, நல்லூர் பிரதேசசபையில் ஆட்சியமைப்பது தொடர்பாகத் தமிழ்மக்கள் கூட்டணியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அனைத்துச்...

சாவகச்சேரி நகரசபை, நல்லூர் பிரதேச சபை ஆகிய சபைகளில் தேசிய மக்கள் சக்தி நடுநிலையைப் பேணியது. (அ-ம-26)

## இலங்கையில்...

நம்பத்தகுந்த கடப்பாட்டையே சிறுபான்மையின மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இதைத்தான் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் காண்பிக்கின்றன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி பின்தள்ளப்பட்டிருப்பதானது, சமத்துவத்தை முன்னிறுத்தி பரப்புரைகளை மேற்கொண்டபோதிலும், அவர்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் முக்கியமான கரிசனைக்குரிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்பதையே காண்பிக்கின்றது. எனவே தற்போது சிறுபான்மையினரின் உரிமைகள் நீதியானதும், சமத்துவமானதுமான முறையில் உறுதிப்படுத்தப்படவேண்டும். அன்றேல் மீண்டும் இனரீதியான மனக்குறைகள் புத்துருவாக்கம் பெறக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. இலங்கையில் கடந்த பல தசாப்தகாலமாக துடிப்புடனும், வெற்றிகரமாகவும் இயங்கிய சிறுபான்மை அரசியலானது அண்மைக்காலமாகப் பலவீனமடைந்துள்ளது. இதற்கு, பல வருடகாலமாகக் கட்டமைப்பு ரீதியாக வலுப்பெற்ற பேரினவாத தேசியவாதம், சிறுபான்மையினக் கட்சிகள் மத்தியில் செயற்றிறன்மிக்க தலைமைத்துவமின்மை, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அல்லது அதிகாரப்பகிர்வு தொடர்பில் தெளிவான முன்மொழிவுகளை முன்வைப்பதில் தேசிய கட்சிகளின் தோல்வி என்பனவே காரணமாகவுள்ளன - என்றுள்ளது. (அ-ம-இ)

## யாழ்...

கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (அ-ம-26)

## கேரளாவில்...

மாகாண பிராந்திய உதவி முகாமையாளர் இது தொடர்பில் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தின் கடற்கரைகளில் பிளாஸ்ரிக் துகள்கள் அண்மைக்காலமாக கரையொதுங்கிவரும் நிலையில் அதுதொடர்பான மேலதிக நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் அண்ணளவாகத் தலா 150 மூடைகளில் இந்தப் பிளாஸ்ரிக் துகள்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றை மீள்சுழற்சிக்குப் பயன்படுத்தலாமா? அல்லது அகற்றப்படவேண்டுமா? அல்லது என்ன செய்யவேண்டும்? என்பது தொடர்பான பரிசீலனைகள் இடம்பெற்றுவருகின்றன. இந்த பிளாஸ்ரிக் துகள்கள் கேரளக் கடற்கரையில் அண்மைய நாள்களாக எரிவடைந்துகொண்டிருக்கும் கப்பலில் இருந்து வெளியான மூலக்கூறுகளாக இருக்கலாம் என்றும் சந்தேகம் உள்ளது. அது தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன - என்றார். (அ-ம-125)

## கல்லாறு...

கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்ததாவது:-

கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறுப் பகுதியில் கடந்த 15 வருடங்களாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்றுவருகின்றது. ஆனால், அகழ்வைக் கட்டுப்படுத்த இதற்கு முன்னர் இருந்த எந்த அரசாங்கங்களும் சரியான நடவடிக்கையை எடுக்கவில்லை. இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்ந்து அனுமதிக்கமுடியாது. கல்லாறுப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தும் வகையில், உடனடியாக இராணுவக் காவலரண் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-113)

## சாவகச்சேரி...

இலங்கைத் தமிழரசுக் கட்சி 6 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி 2 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன. தமிழ்த் தேசியப் பேரவைக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி ஆதரவு வழங்கத் தீர்மானித்திருந்தது. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஈ.பி.டி.பி., ஆதரவு வழங்கத் தீர்மானித்தது. தேசிய மக்கள் சக்தி நடுநிலை என அறிவித்தது. இதனால், தமிழ்த் தேசியப் பேரவை 8:7 என்ற அடிப்படையில் ஆட்சியமைக்கும் என்று கருதப்பட்டது.

**நீதிமன்ற வழக்கு**

ஆனால், தமிழ் மக்கள் பேரவையின் ஓர் உறுப்பினரின் உறுப்புரிமைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, அவரின் உறுப்புரிமைக்கு நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்ததால், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ்த் தேசியப் பேரவைக்குமான உறுப்பினர்களின் ஆதரவு 7:7 என்று சமநிலையில் காணப்பட்டது.

இதையடுத்து திருவுளச்சீட்டின்மூலம் ஆட்சியமைப்பதைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டது. பேரவையின் சார்பில் தவிசாளராகப் பிரேரிக்கப்பட்ட வ.ஸ்ரீபிரகாஷின் பெயர் திருவுளச்சீட்டில் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியப் பேரவை ஆட்சியமைத்ததாக அறிவிக்கப்பட்டது. உபதவிசாளராக ஞா.கிஷோர் தெரிவானார். (அ-ம-26)

## யாழ்ப்பாண...

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதலாவது அமர்வு, யாழ்ப்பாணம் மாநகர சபா மண்டபத்தில் நேற்றுக்காலை உள்ளூராட்சி ஆணையாளரின் தலைமையில் இடம்பெற்றது.

45 உறுப்பினர்களைக் கொண்ட யாழ்ப்பாணம் மாநகரசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 13 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 12 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி., மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.

மேயர் பதவிக்காக தமிழரசுக் கட்சியின் சார்பில் விவேகானந்தராஜா மதிவதனியும், இலங்கைத் தமிழ் காங்கிரஸின் சார்பில் கனகையா ஸ்ரீகிருஷ்ணாவும் பரிந்துரைக்கப்பட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட மதிவதனி விவேகானந்தராஜாவுக்கு ஆதரவாக வாக்களித்தன. இதையடுத்து அவர் 19 வாக்குகளைப் பெற்று மேயராகத் தெரிவானார். துணை மேயராக இம்மானுவேல் தயாளன் தெரிவானார். 10 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய மக்கள் சக்தியினர் வாக்களிப்பில் நடுநிலை வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

பிரபல உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- பார்சல் கட்டுபவர் - நாள் ஒன்றிற்கு 2500/= (ஆண்)
- துப்பரவு பணியாளர் - நாள் ஒன்றிற்கு 2000/= (ஆண்)
- உணவு விநியோகிப்பவர் - நாள் ஒன்றிற்கு 2000/= (ஆண்)
- சிட்டை எழுதுனர் - இருபாலரும் - நாள் ஒன்றிற்கு 2200/=

தொடர்பு: **077 907 9888**

## வேலைவாய்ப்பு

யாழ்நகரில் இயங்கும் பிரபல்யமான உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலைக்கு பணியாளர்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் (Waiter)
  Basic Salary : 45000/=
- சமையல் உதவியாளர் (Kitchen helper)
  Basic salary : 45000/=
- மேலும் திறமைக்கு ஏற்ப Salary அதிகரிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிபரத்தை பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு :- **076 467 4313**

## வீடு வாடகைக்கு உண்டு

இராமநாதன் வீதி பல்கலைக்கழகத்திற்கு
முன்பாக அமைந்துள்ள
மேல் வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு: **076 882 8694**

## மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida" ஒரிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலிகள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்துவிடாதீர்.



"நாங்கள் உங்களோடு"

**ஆர்க் .என். கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803




# இஸ்ரேல் - ஈரான் இடையே வெடித்தது நேரடி மோதல்!

தெஹ்ரோன், ஜூன் 14

ஈரானின் அணுசக்தித் தளங்கள் மற்றும் இராணுவ நிலைகளை இலக்குவைத்து இஸ்ரேல் நேற்று வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதற்கு ஈரானும் பதிலடி கொடுக்க ஆரம்பித்துள்ளதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ஈரான் அணுகுண்டுகளைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்த நிலையில், அவ்வாறான கேந்திரப் பகுதிகளே இஸ்ரேலின் பிரதான இலக்காக இருந்ததாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில், ஈரானின் அணுவிஞ்ஞானிகள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன், ஈரானின் அதியுயர் இராணுவத் தளபதிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக, இஸ்ரேலின் டெல்அவிவ் நகரங்கள் ஈரானால் தாக்கப்பட்டுள்ளன. நூற்றுக் கணக்கான ட்ரோன்கள் இஸ்ரேலிய நகரங்களைத் தாக்கியதாகவும் கூறப்பட்டுள்ளது. (ம)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 6 பரப்பு காணி விற்பனைக்கு


- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதி ஊரெழு பிள்ளையார் கோயில் முன்வீதி 150m, தூரத்தில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், செம்மண் காணி
- குடியிருப்புக்கள் சூழவுள்ள காணி

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6மணி வரை

தொடர்பு :- 076 739 0413 / 077 623 4204


## மரண அறிவித்தல்

மலர்வு 31 . 10 . 1933



உதிர்வு 12 . 06 . 2025

### திரு. சுப்பிரமணியம் சண்முகம்

(ஓய்வுநிலை நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி வட்டக்கச்சி சில்வா வீதியையும், பிரம்படி வீதி கொக்குவிலையும் வதிவிடமாக கொண்ட திரு. சுப்பிரமணியம் சண்முகம் அவர்கள் (12.06.2025) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலம்சென்ற அன்னம்மா அவர்களின் அன்பு கணவரும், மனோரஞ்சனி, காலம்சென்ற ஜெயகுமார், சுலோஜனா, யோகரஞ்சிதம் அவர்களின் அன்பு தந்தையும், ஜெயநாதன், தெய்வலக்சுமி, சுரேந்திரநாதன், மதிக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாகும் சாரங்கன், சயானி, ரிசாங்கன், சுமி, றொசான், கெவின், விருஷ்ணி, சசாங்கன், மகிசா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், 36/2 பிரம்படி வீதி கொக்குவில் எனும் முகவரியில் (15.06.2025) காலை 09.30மணியளவில் நடை பெற்று, தகனக்கிரியை வட்டக்கச்சி மாயவனூர் (மம்மில்) இந்து மயானத்தில் காலை 02.00 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்
குடும்பத்தினர்

077 115 1262 - சுலோஜனா (ராதா)
416 770 5192 - யோகா
4478 601 22826 -ரஞ்சி

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 11 . 1974



மறைவு 11 . 06 . 2025

### சிலோசனா உதயகுமார்

புத்தூர் மேற்கு சிவன் கோவிலடியை பிறப்பிட மாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சிலோசனா உதயகுமார் அவர்கள் கடந்த 11.06.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மகாலிங்கம் - காலஞ்சென்ற புஸ்பராணி தம்பதியரின் பாசமிகு மகளும், உதயகுமார் அவர்களின் பாசமிகு மனைவியும், ஹரிணிறியா அவர்களின் பாசமிகு தாயாரும், பவானந்தன் அவர்களின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன் கோவிலடி,
புத்தூர் மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல் :
பவானந்தன் (சகோதரன்)
077 722 2307

(CS/58566) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org